# உயர்கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சு

## ஆர்வ வெளிப்பாட்டுக்கான (EOI) கோரிக்கை

**ஒப்படையின் தலைப்பு: 'பட்டமளிப்பு நிறுவகமொன்றாக' ஏற்றங்கீகரிக்கப்படுவதனை எதிர்பார்க்கும் உயர்கல்வி நிறுவகங்களின் முன்மொழிவுகளை மீளாய்வுசெய்யும் பொருட்டு மீளாய்வாளர்களாகச் செயற்படுவதற்காக விண்ணப்பம் கோரல்**

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25 அ பிரிவின் கீழ் உயர்கல்வி நிறுவகங்களை பட்டமளிப்பு நிறுவகங்களாக ஏற்றங்கீகரிப்பதற்கு உயர்கல்வி விடயப்பொறுப்பு கௌரவ அமைச்சருக்கு தத்துவமளிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அறிக்கை சமர்ப்பிப்பதற்கு கௌரவ அமைச்சரினால் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 70 ஆ பிரிவிற்கமைய குறித்துரைக்கப்பட்ட அதிகாரியாக இவ்வமைச்சின் செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் 2013.08.22 ஆந் திகதிய, 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க 'குறித்துரைக்கப்பட்ட அதிகாரியின் விதிகள்' வெளியிடப்பட்டதுடன், குறித்த விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய மீளாய்வுச் சபைகள் நியமிக்கப்படுகின்றன. நிறுவகத்தையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் ஏற்றங்கீகரிக்கும் பணியை நிறைவேற்றுவதில் குறித்துரைக்கப்பட்ட அதிகாரிக்கு உதவும் பொருட்டு மீளாய்வுச் சபைகள் காணப்படுகின்றன. மேலும், குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் மீளாய்வுகளை மேற்கொள்வதற்கும் நியமிக்கப்படுகின்ற மீளாய்வாளர்களின் குழாமொன்று பேணி வரப்படுகிறது. எந்தவொரு மீளாய்வுச் சபையின் அங்கத்தவர்களின் அமைப்பும் முன்மொழிவின் உள்ளடக்கத்தை அடிப்படையாகக்கொண்டதாக அமையும். "விசாரணை நியதிகள் (TOR)", "ஆர்வ வெளிப்பாட்டு (EOI) தகவல் மாதிரிப்படிவம்" என்ற ஆவணங்களை www.mohe.gov.lk என்ற அமைச்சின் இணையத்தளத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

மீளாய்வுக் குழாம் உறுப்பினர்களின் அடிப்படையை விரிவுபடுத்துவதற்கு அமைச்சு எதிர்பார்க்கின்றது. ஆகையால், கற்கைகள் அத்துடன்/ அல்லது தொழில் தகைமைகளைக் கொண்டுள்ள அத்துடன் தர உறுதிப்படுத்தல், கல்வி, வணிக, முகாமைத்துவ, கைத்தொழில், விஞ்ஞான, சட்ட அல்லது நிருவாக அல்லது வேறு சம்பந்தப்பட்ட துறைகள் முதலிய துறைகளில் நிரூபிக்கப்பட்ட அனுபவங்களைக் கொண்டுள்ள அத்துடன் மீளாய்வுச் சபைகளுடன் இணைய விருப்பும் ஆட்களிடமிருந்து ஆர்வ வெளிப்பாடுகள் (EOI) கோரப்படுகின்றன.

மீளாய்வாளர்களுக்கு இலங்கையிலும் வெளிநாடுகளிலும் அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவகங்களும் கல்விசார் நடைமுறைகளும் பற்றிய பரந்த அனுபவமும் கற்கை முகாமைத்துவம், தர சான்றுறுதிப்படுத்தல் பற்றிய அனுபவங்கள், மீளாய்வுச் செயன்முறை பற்றிய அறிவும் புரிந்துணர்வும், உயர்கல்வியின் தரச் சான்றுறுதிப்படுத்தலின் மூலக்கோட்பாடுகள், தேசிய வழிகாட்டுநெறிகள் மற்றும் ஏனைய துறைகள் மீது விரிவான பரப்பில் வேலைசெய்யும் அனுபவம், ஆர்வம் முதலியனவும் இருத்தல் வேண்டுமென அமைச்சு எதிர்பார்க்கின்றது.

"EOI தகவல் மாதிரிப் படிவத்தில்" குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு கோரப்பட்டுள்ள தகவல்களையும் தொழில் அனுபவங்களுக்கான ஆவணப்படுத்திய சான்றுறுதிகளையும் ஆர்வ வெளிப்பாட்டினுள் (EOI) உள்ளடங்கியிருத்தல் வேண்டும். மேற்கூறிய விடயங்களுக்கு மேலதிகமாக, அக்கறை முரண்பாடுகளுக்கு (Conflict of Interests) தூண்டுதல் அளிக்கக்கூடும் என்பதால் ஒவ்வொரு மீளாய்வாளரும் அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவகங்களுடன் தாம் தொடர்புபட்டவர்களாய் இல்லை என்பதற்கான சுய வெளிப்படுத்தலொன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும். பின்னிணைப்புகள் கையடக்க ஆவண வடிவில் (PDF) தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

விருப்பார்வமுள்ள தரப்பினர்களுக்கு 011-2879723 / 011-2879720 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் அரச சார்பற்ற உயர்கல்விப் பிரிவின் அலுவலர்களுடன் தொடர்பை ஏற்படுத்துவதன் மூலம் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

கோரப்பட்டுள்ள அனைத்துத் தகவல்களையும் உள்ளடக்கிய ஆர்வ வெளிப்பாடு (EOI) **nsu-info@mohe.gov.lk** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 2020.08.31 ஆந் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்னர் அனுப்பிவைத்தல் வேண்டும்.

**செயலாளர்/குறித்துரைக்கப்பட்ட அதிகாரி**
உயர்கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சு

2020.06.24